# கோவில்பட்டி நகராட்சி

## சாதாரணக் கூட்டம்

நிகழும் விகாரி வருடம் ஆடி திங்கள் 16, நாள்.31.07.2020ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து சாதாரண கூட்டம் நடைபெறும்.

முன்னிலை:- திரு.ஒ.ராஜாராம்,பி.காம்.,

கோவில்பட்டி நகராட்சி — தனி அலுவலர்,

நாள்: 31.07.2020 — கோவில்பட்டி நகராட்சி

| மன்ற கூட்ட தேதி | வரசை எண் மற்றும் மன்றப்பொருள் | மன்றத் தீர்மானம் |
|---|---|---|
| 31.07.2020 | <u>பொருள் எண்: 1</u><br>கொரோனா (கோவிட்-19) வைரஸ் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கை பணிகளை மேற்கொள்வதற்கு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.5437/2020-10/ஜே1 நாள்: 09.04.2020ல் அறிவுறுத்தியுள்ளபடியும், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்களின் ஆய்வுக்கூட்டம் நாள்:27.06.2020 மற்றும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்டம் நாள்:29.06.2020ல் அறிவுறுத்தியுள்ளபடியும், தற்போது வைரஸ் தொற்று பரவல் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருப்பதாலும், பெருகொள்ளை நோயாக (Pandemic) உருவெடுத்துள்ள கொரோனா (கோவிட்–19) வைரஸ் தொற்று சர்வதேச பரவலின் காரணமாக போர்க்கால அடிப்படையில் அவசர தடுப்பு பணிகள் மேற்கொள்வதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.100.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் முழு மானியத்துடன் சிறப்பு நிதி கோருவதற்கான முன்மொழிவு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:-</u><br>1.மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கலாம்.<br>2.தற்போது வைரஸ் தொற்று பரவல் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருப்பதாலும், பெருகொள்ளை நோயாக (Pandemic) உருவெடுத்துள்ள கொரோனா (கோவிட்-19) வைரஸ் தொற்று சர்வதேச பரவலின் காரணமாக போர்க்கால அடிப்படையில் அவசர தடுப்பு பணிகள் மேற்கொள்வதற்காகவும், இதற்கான செலவினத்திற்கு | தீர்மானம் எண்.4083 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

இந்நகராட்சியின் தற்போதைய நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு முழுமானியத்துடன் கூடிய சிறப்பு நிதி கோருவதற்கான முன்மொழிவு அனுப்புவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1840/2020/எச்1

| BUDGET ESTIMATION FOR COVID-19 CONTROL ACTIVITIES FOR 3 MONTHS | | | | |
|---|---|---|---|---|
| **SL. NO.** | **Name of Material/Machinery** | **Rate Per Unit (Rs)** | **Quantity** | **Amount (Rs) (Including G.S.T)** |
| 1 | Single Use Triple Layer Mask | 12.00 | 20000 Nos | 240000 |
| 2 | Single Use Gloves | 7.08 | 80000 Nos | 566400 |
| 3 | Synthetic Gloves | 306.8 | 500 Nos | 153400 |
| 4 | PPE Kit | 590.00 | 2000 Nos | 1180000 |
| 5 | Garbage Cover (Yellow) | 22.00 | 10000 Nos | 220000 |
| 6 | Lysol | 224.2 | 8500 Litre | 1905700 |
| 7 | Bleaching Powder | 62.54 | 40000 Kg | 2501600 |
| 8 | Lime Powder | 18.88 | 50000 Kg | 944000 |
| 9 | Soap (LIQUID SOAP) | 188.8 | 2000 Litre | 377600 |
| 10 | N95 Mask | 295.00 | 2000 Nos | 590000 |
| 11 | Sanitizer | 590.00 | 500 Litre | 295000 |
| 12 | IEC Stickers, Flex Banners, Pamplet, Notice & Survey Forms | | | 400000 |
| 13 | Arrangements for Social Distancing and spraying in public Places & Markets | | | 100000 |
| 14 | Hand Washing (Wash Basin) arrangements and Procurements of Safety Materials | | | 150000 |
| 15 | Hire Charges for Vehices to carry food, disinfectant materials and other activities related to COVID-19 | | | 100000 |
| 16 | Battery operated Sprayer | | 12 Nos | 57000 |
| 17 | Containment Zone Activities – Barricade arrangements | | | 200000 |
| 18 | Purchase of Anti Body creating medicines & Kabasura Kudineer Powder & Arrangements for medical camp in containment zone | | 50,000 Nos of Zinc tablet & Multi vitamin & 2000 Kgs of Kabasura kudineer Powder | 605200 |
| 19 | Biomedical waste Management Charges | | | 100000 |
| | **TOTAL** | | | **10685900** |

| | | |
|---|---|---|
| | <u>பொருள் எண்: 2</u><br>கொரோனா (கோவிட்-19) வைரஸ் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கை பணிகளை மேற்கொள்வதற்கு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.5437/2020-10/ஜே1 நாள்:09.04.2020ல் அறிவுறுத்தியுள்ளபடியும், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்களின் ஆய்வுக்கூட்டம் நாள்:27.06.2020 மற்றும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்டம் நாள்:29.06.2020ல் அறிவுறுத்தியுள்ளபடியும், தற்போது வைரஸ் தொற்று பரவல் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருப்பதாலும், பெருகொள்ளை நோயாக (Pandemic) உருவெடுத்துள்ள கொரோனா (கோவிட்–19) வைரஸ் தொற்று சர்வதேச பரவலின் காரணமாக போர்க்கால அடிப்படையில் அவசர தடுப்பு பணிகள் மேற்கொள்வதற்காகவும், தொற்று கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் தேவையான தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும், பேரிகார்டு அமைப்பதற்குத் தேவையான தகர சீட்டுகள் மற்றும் மூங்கில் கம்புகள் வாங்குவதற்கும், கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் வழங்குவதற்கும், தொற்று உறுதி செய்யப்பட்ட நபர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்குவதற்கும், கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் சேகரமாகும் பயன்படுத்தப்பட்ட முககவசங்கள், கையுறைகள், பாதுகாப்பு உடைகள் உள்ளிட்ட அபாயகரமான கழிவுகள் மற்றும் திடக்கழிவுகளை தனித்தனியாக சேகரிப்பதற்கு தேவையான மஞ்சள் கலர் பைகளை வாங்குவதற்கும், தினசரி சேகரமாகும் அபாயகரமான கழிவுகளை தனியார் உயிரி மருத்துவ கழிவு மேலாண்மை நிறுவனத்தின் மூலம் பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்துவதற்கான செலவினத்திற்கும், தேவையான பாதுகாப்பு உபகரணங்கள், கிருமிநாசினிகள், தெளிப்பான்கள், தற்பாதுகாப்பு உபகரணங்கள், சுகாதார பொருட்கள் உள்ளிட்ட தேவையான உபகரணங்கள் மற்றும் பொருட்கள் வாங்குவதற்கும், வீடு, வீடாக கணக்கெடுப்பு பணி மேற்கொள்ள தேவையான எழுது பொருட்கள் மற்றும் படிவங்கள் அச்சிடுவதற்கும், விழிப்புணர்வு நிகழ்விற்குத் தேவையான பேனர்கள், துண்டுபிரச்சுரங்கள் அச்சிடுவதற்கும், நோய் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் மருத்துவ பரிசோதனை முகாம்கள் அமைப்பதற்கும், நோய் எதிர்ப்பு சக்தி | தீர்மானம் எண்.4084 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

மாத்திரைகள் மற்றும் சித்தா மருத்துவ கபசுர குடிநீர் தயார் செய்து வழங்குவதற்கும், இதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.100.00 இலட்சத்திற்கும், போர்க்கால அடிப்படையில் பணி மேற்கொள்ளயிருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி பொதுநிதியிலிருந்து செலவினத்திற்கு பயன்படுத்திக்கொள்ளவும், தமிழ்நாடு அரசின் பேரிடர் நிவார நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் மேற்படி பொது நிதியிலிருந்து செய்த செலவினத்தை ஈடு செய்யவும் மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.தற்போது வைரஸ் தொற்று பரவல் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருப்பதாலும், பெருகொள்ளை நோயாக (Pandemic) உருவெடுத்துள்ள கொரோனா (கோவிட்-19) வைரஸ் தொற்று சர்வதேச பரவலின் காரணமாக போர்க்கால அடிப்படையில் அவசர தடுப்பு பணிகள் மேற்கொள்வதற்காகவும், பொது நிதியிலிருந்து பயன்படுத்திக்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1840/2020/எச்1

**பொருள் எண்: 3**

இந்நகராட்சி பகுதிகளில் தொற்று உறுதி செய்யப்பட்ட நபர்கள் மற்றும் தொற்று கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் கிருமிநாசினிகள் தெளித்தல் மற்றும் நோய் கட்டுப்படுத்தப்பட்ட வீடுகளில் அபாயகரமான கழிவுகளை சேகரிக்கும் மற்றும் எடுத்துச்செல்லும் பணிகளில் ஈடுபட்டுள்ள தூய்மைப் பணியாளர்களுக்குத் தேவையான தற்பாதுகாப்பு கவசம் சப்ளை செய்ய 10.07.2020 தேதியில் விலைப்புள்ளி பெறப்பட்டது. இதில் கீழ்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ எண். | பெயர் மற்றும் முகவரி | தொகை |
|---|---|---|
| 1. | SRI BALAMURUGAN EMPORIUM<br>32-A, CHATHIRAM EAST CAR STREET,<br>KOVILPATTI. | Rs. 600+GST 5% |
| 2. | JEYA GARMENTS<br>506C/1, SIDCO, INDUSTRIAL ESTATE,<br>ETTAYAPURAM MAIN ROAD,<br>KOVILPATTI - 628501. | Rs. 500+GST 5% |

தீர்மானம் எண்.4085 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த JEYA GARMENTS, 506C/1, SIDCO, INDUSTRIAL ESTATE, ETTAYAPURAM MAINROAD, KOVILPATTI-628501. விலைப்புள்ளியினை ஏற்கலாம். செலவினத் தொகை மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

(அ) பொதுசுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு விலைப்புள்ளி கோரியதையும், குறைவான விலைப்புள்ளி அளித்த JEYA GARMENTS, 506C/1, SIDCO, INDUSTRIAL ESTATE, ETTAYAPURAM MAIN ROAD, KOVILPATTI-628501. விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1840/2020/எச்1

<u>பொருள் எண்: 4</u>

இந்நகராட்சி பகுதிகளில் தொற்று உறுதி செய்யப்பட்ட நபர்கள் மற்றும் தொற்று கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் தேவையான தடுப்பு ஏற்படுத்துதல் (Barricade Arrangements) தேவையான தகர சீட்டுகள் மற்றும் மூங்கில் கம்புகள் சப்ளை செய்ய 14.07.2020 தேதியில் விலைப்புள்ளி பெறப்பட்டது. இதில் கீழ்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண். | பொருட்களின் விபரம் | சிதம்பரனார் மாவட்டம் ஒப்பந்த பணியாளர் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்., | திருநெல்வேலி மாவட்டம் ஒப்பந்த பணியாளர் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்., |
|---|---|---|---|
| | | ஒன்றுக்குரிய தொகை + GST | |
| | | Rs. P. | Rs. P. |
| 1. | 8 x 3 தகர சீட் | 340 | 343 |
| 2. | 10 x 3 தகர சீட் | 420 | 425 |
| 3. | 10 அடி மூங்கில் கம்பு | 225 | 230 |
| 4. | 20 அடி மூங்கில் கம்பு | 400 | 420 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த சிதம்பரனார் மாவட்டம் ஒப்பந்த பணியாளர் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்., விலைப்புள்ளியினை ஏற்கலாம். செலவினத் தொகை மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

(அ) பொதுசுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு விலைப்புள்ளி கோரியதையும், குறைவான விலைப்புள்ளி அளித்த சிதம்பரனார் மாவட்டம் ஒப்பந்த பணியாளர் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்., விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1840/2020/எச்1

தீர்மானம் எண்.4086

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்: 5**

இந்நகராட்சி பகுதிகளில் கொரோனா தொற்று பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடு,வீடாகச் சென்று தெர்மல் ஸ்கேனர் மற்றும் பல்ஸ் ஆக்ஸிமீட்டர் மூலம் பொதுமக்களின் உடல்வெப்பம் மற்றும் ஆக்ஸிஜன் அளவு பரிசோதனை செய்தல், குடும்ப உறுப்பினர்களின் உடல்நலம் குறித்த கணக்கெடுப்பு செய்தல் மற்றும் தொற்றுக்கு இலக்காக வாய்ப்புள்ளவர்கள் குறித்து விவரம் கண்டறிதலுக்கு தேவையான காய்ச்சல் கணக்கெடுப்பு படிவம் அச்சிட்டு சப்ளை செய்ய 14.07.2020 தேதியில் விலைப்புள்ளி பெறப்பட்டது. இதில் கீழ்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண். | பொருட்களின் விவரம் | ஸ்ரீபாலா டிஜிட்டல் 550/8, மெயின்ரோடு, கோவில்பட்டி-628501 | ஜெய்ஸ்ரீ பிரிண்டர்ஸ் 117, தெற்கு பஜார், கோவில்பட்டி-628501. |
|---|---|---|---|
| | | ஒன்றுக்குரிய தொகை + GST | |
| | | Rs. P. | Rs. P. |
| 1. | காய்ச்சல் கணக்கெடுப்பு படிவம் பிரிண்டிங் முன்/பின் பிரிண்ட் (1x3) அளவில் தரமான மேப்லித்தோ பேப்பர் கொண்டு | 3500 | 4200 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த ஸ்ரீபாலா டிஜிட்டல் 550/8, மெயின்ரோடு, கோவில்பட்டி-628501 விலைப்புள்ளியினை ஏற்கலாம். செலவினத் தொகை மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

(அ) பொதுசுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு விலைப்புள்ளி கோரியதையும், குறைவான விலைப்புள்ளி அளித்த ஸ்ரீபாலா டிஜிட்டல் 550/8, மெயின்ரோடு, கோவில்பட்டி-628501 விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1840/2020/எச்1

**தீர்மானம் எண்.4087**

**அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

| | | |
|---|---|---|
| | <u>பொருள் எண்: 6</u><br>தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் வசித்து வரும் மக்களில் முதியோர் உதவித்தொகை மற்றும் இதர உதவித்தொகை பெறுவதற்குத் தகுதியான நபர்களாக இருந்தும் வறுமைக்கோடு பட்டியலில் அவர்களது பெயர்கள் இடம் பெறவில்லை. எனவே கீழ்க்கண்ட நபர்களின் பெயர்களை வறுமைக்கோடு பட்டியலில் சேர்த்து தரும்படி கோவில்பட்டி சமூகப் பாதுகாப்புத்திட்ட வட்டாட்சியரின் கடித ந.க.எண்.ஜி2/2424/19 நாள்:09.06.2020 தேதியிட்ட கடிதங்களில் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் வறுமைக் கோட்டுப் பட்டியலில் கீழே குறிப்பிட்டுள்ள 10 நபர்களின் பெயர்களைச் சேர்க்க மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. | தீர்மானம் எண். 4088<br>அலுவலக குறிப்பு அங்கீ கரிக் கப்பட்டது. |

| வ. எண். | வார்டு எண். | மனுதாரரின் பெயர் | கணவர் அல்லது தந்தை பெயர் | முகவரி | தரக் குறியீடு | வரிசை எண். |
|---|---|---|---|---|---|---|
| 1. | 32 | சாந்தி | முருகன் | 88, பாரதிநகர், பசுவந்தனைரோடு, கோவில்பட்டி. | 12 | 5083 |
| 2. | 14 | சண்முகத்தாய் | பெரியசாமி | 31ஏ2, முத்தையம்மாள்தெரு, கோவில்பட்டி. | 13 | 5084 |
| 3. | 14 | சோபா | தங்கவேல் | 131, முத்தையாமால்தெரு, கோவில்பட்டி. | 14 | 5085 |
| 4. | 31 | மாரியம்மாள் | மாரியப்பன் | 70, சாஸ்திரிநகர், கோவில்பட்டி. | 13 | 5086 |
| 5. | 32 | காந்தி | அழகிய சுந்தர பெருமாள் | 14, மேல்பக்கம்தெரு, அரியப்பதேவர் காம்பவுண்ட், கோவில்பட்டி. | 12 | 5087 |
| 6. | 19 | வைரம் | காளியப்ப ன் | 194, செக்கடித்தெரு-3 | 14 | 5088 |
| 7. | 1 | ராஜா | எட்டுத்தேவ ர் | 23, பாலன்தெரு, காந்திநகர், கோவில்பட்டி. | 12 | 5089 |
| 8. | 30 | பார்வதி | கணபதி | 113/60, பாரதிநகர் ஓடைதெரு-2, கோவில்பட்டி. | 13 | 5090 |
| 9. | 04 | மாரியப்பன் | முருகன் | 114, பண்ணைத்தோட்டம் தெரு, கோவில்பட்டி. | 14 | 5091 |
| 10. | 11 | சௌந்திர பாண்டியன் | அருணாச்ச லம் நாடார் | 75/86, பங்களாதெரு கடலையூர் ரோடு, கோவில்பட்டி. | 12 | 5092 |

| | | |
|---|---|---|
| | <u>அலுவலக குறிப்பு:-</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. சமூக பாதுகாப்புத்திட்ட வட்டாட்சியர், கோவில்பட்டி அவர்கள் அறிக்கையின்படி வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள 10 நபர்களை சேர்க்க அரசின் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கலாம்.<br>ந.க.எண்.3089/2020/எச்1 | |
| | <u>பொருள் எண்: 7</u><br>இந்நகராட்சிக்குட்பட்ட ஆணையாளர் குடியிருப்பில் கிழக்கு பக்கம் சுற்றுச்சுவர் அமைப்பதற்கும், மற்ற பக்கத்திலுள்ள சுற்றுச்சுவற்றை உயர்த்துவதற்கும், அப்பகுதியை சுற்றி கான்கிரீட் பேவர் கல்தளம் அமைப்பதற்கும் மற்றும் உட்புற வசதிகள் செய்யும் பணிக்கு ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தனி அலுவலர் அவர்களால் 30.06.2020ல் மன்ற எண்.4080 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 21.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.<br><br>1) திரு.வி. சத்யசீலன் .. மதிப்பீட்டைவிட (-) 0.02 % குறைவு<br>2) திரு.எச்.முகமது இப்ராஹிம் .. மதிப்பீட்டைவிட (+) 1.02 % அதிகம்<br><br>வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (-) 0.02% குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தக்காரர் திரு.வி.சத்யசீலன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:-</u><br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) ஆணையாளர்/தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2869/2020/இ1 | தீர்மானம் எண்.4089 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>
<u>பொருள் எண்: 8</u><br>
இந்நகராட்சிக்குட்பட்ட தாலுகா மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலுள்ள முன்பக்க கதவினை சரி செய்து பொருத்துவதற்கும், வாகனம் செல்வதற்கு சாய்வுதளம் அமைப்பதற்கும் கூடுதல் வசதிகள் செய்யும் பணிக்கு ரூ.1.60 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தனி அலுவலர் அவர்களால் 30.06.2020ல் மன்ற எண்.4081 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 21.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.
<table>
<tr><td>1) திரு.வி. சத்யசீலன்</td><td>..</td><td>மதிப்பீட்டைவிட (-) 0.01 % குறைவு</td></tr>
<tr><td>2) திரு.எச்.முகமது இப்ராஹிம்</td><td>..</td><td>மதிப்பீட்டைவிட (+) 1.05 % அதிகம்</td></tr>
</table>
வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (-) 0.01% குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தக்காரர் திரு.வி.சத்யசீலன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு:-</u><br>
1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2) ஆணையாளர்/தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.2869/2020/இ1
</td>
<td>தீர்மானம்<br>எண்.4090<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>
<u>பொருள் எண்: 9</u><br>
இந்நகராட்சி 2020-2021ம் ஆண்டிற்கு அம்மா உணவகத்திற்கு தேவையான மளிகை பொருட்கள், காய்கறிகள், அரிசி, எரிவாயு உருளை, தயிர் மற்றும் பணியாளர்கள் ஊதியம் வழங்கிட உத்தேச செலவினத் தொகை ரூ.50,00,000/-இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண். 7521/2014/அ1)
</td>
<td>தீர்மானம்<br>எண்.4091<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>
<u>பொருள் எண்: 10</u><br>
இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள சிதம்பராபுரம் உரக்கிடங்கில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்ட நிதி மற்றும் தூய்மை இந்தியா திட்ட நிதியின் கீழ் ரூ.394.89 இலட்சம் மதிப்பீட்டில் 40 KLD கொள்ளளவு கொண்ட கசடு கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டப்பணி அண்ணா பல்கலைக்கழகம் திருநெல்வேலியிலிருந்து உரிய வடிவமைப்பு (Structural Design) பெறப்பட்டு மேற்கொள்ளப்பட்டது.அண்ணா பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட வடிவமைப்பின்படி
</td>
<td>தீர்மானம்<br>எண்.4092<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்ட இனங்களில் மேற்படி இடத்தின் மண்ணின் தாங்கும் திறனுக்கேற்ப கட்டிடத்தின் அஸ்திவாரம் மற்றும் தூண் (Column), விட்டம் (Beam) ஆகியவற்றின் வடிவமைப்பிற்கேற்ப கூடுதல் கான்கிரீட், சென்ட்ரிங் மற்றும் கம்பி கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகிறது. மேலும், அவ்வாறு பணிகள் மேற்கொள்ளப்பட்டால் மட்டுமே பணிகளை முழுமையான அளவில் முடிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கேற்ப பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் மதிப்பீட்டுத் தொகை ரூ.394.89 இலட்சத்திற்குள் பணியை செய்து முடிக்க இயலவில்லை. சில இனங்களில் கூடுதலாக பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதால் ஏற்பட்ட கூடுதல் செலவினம் ரூ.38.40 இலட்சம் ஆக கூடுதல் பணியின் மொத்த மதிப்பு ரூ.433.29 இலட்சமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.<br><br>மேற்கண்ட திட்டத்தினை சிறந்த முறையில் செயல்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு மேற்கண்ட திட்டத்திற்கு தேவையான கூடுதல் பணிகள் மதிப்பீட்டு மதிப்பில் 10%க்கு கீழ் கூடுதலாக வரும் தொகை ரூ.38.40 இலட்சத்திற்கு (9.72 மதிப்பீட்டைவிட) கூடுதல் பணிகள் செய்ய வேண்டியுள்ளது. தற்போது, ரூ.394.89 இலட்சத்திற்கு பணிகள் செய்து பணி நடைபெற்று வருகிறது. மதிப்பீட்டைவிட கூடுதலாக மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான தொகை ரூ.38.40 இலட்சத்தினை செலவிட்டால் மட்டுமே பணி முழுமையாக முடிக்க இயலும். எனவே, கூடுதல் செலவினம் ரூ.38.40 இலட்சத்திற்கு IUDM திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு மற்றும் பணித்தாள் அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:-</u><br>மன்றம் இப்பணியை IUDM திட்டத்தின் கீழ் அரசிடமிருந்து முழு மான்யமாகப் பெற்று செய்ய அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4006/2018/இ1) | |

| | | |
|---|---|---|
| | <u>பொருள் எண்:</u> 11<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8, புதுக்கிராமத்தில் 2000-2001ம் ஆண்டு வருடத்திய மயான அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தகனமேடை கட்டப்பட்டது. இத்தகனமேடை கட்டப்பட்டு 20 வருடங்கள் மேலாகிவிட்டது. மேலும் பழுதடைந்துள்ளது கூறைப் பகுதியில் கான்கிரீட் உதிர்ந்து கம்பிகள் தெரியும் நிலையில் உள்ளது. இதற்கு 8வது வார்டு முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் அளித்துள்ள கடிதத்தில் தகனமேடை பழுதாகிவிட்டது. தற்பொழுது, மழைக்காலம் ஆரம்பமாக இருப்பதாலும் தகனமேடை பயன்படுத்த இயலாத சூழ்நிலை உருவாகும் என்பதாலும் பழுதடைந்த தகன மேடையை புதிதாக கட்டித்தரக் கோரி மனு செய்துள்ளார். தகன மேடையை புதிதாக கட்டுவதற்காகவும், இப்பணி முடிக்கப்பட்டபின் பழைய தகன மேடையை இடித்து அப்புறப்படுத்துவதற்கும் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.9.25இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 3367/2020/இ1 | தீர்மானம் எண்.4093<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| | <u>பொருள் எண்:</u> 12<br>இந்நகராட்சிக்குட்பட்ட அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் கடை எண்.10C, குத்தகைதாரர் திரு.ராஜசேகரன் என்பவர் வைப்புத்தொகை வழங்க கோரியுள்ளார்.அன்னாருக்கு வைப்புத்தொகை ரூ.50500/-ஐ வழங்கலாம் என வருவாய் ஆய்வாளர் மற்றும் வருவாய் அலுவலர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். மேற்படி அறிக்கையின்படி குத்தகைதாரர் திரு.ராஜசேகரன் என்பவருக்கு முன்வைப்புத் தொகை ரூ.50500/-ஐ திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1182/2019/அ3 | தீர்மானம் எண்.4094<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| | <u>பொருள் எண்:</u> 13<br>நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.5437/ஜே2/2020-12நாள்:15.04.2020-ல் அறிவுறுத்தியுள்ளபடி பொதுமக்களுக்கு கொரோனா வைரஸ் தடுப்பு முயற்சியில், பயன்படுத்தப்பட்ட முகக்கவசங்கள் மற்றும் கையுறைகள், நோய் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகள் மற்றும் கிருமிநாசினி தெளிக்கும் பணிகளில் தூய்மைப் பணியாளர்களால் பயன்படுத்தப்பட்ட தற்பாதுகாப்பு கவசங்கள் ஆகியவற்றை பாதுகாப்பாக அப்புறப்படுத்தும் பொருட்டு இந்நகராட்சி மற்றும் ASEPTIC SYSTEMS, BIO–MEDICAL WASTE MANAGEMENT COMPANY, 4–65, 5TH CROSS STREET, N.G.O. 'A' COLONY, TIRUNELVELI - 627007. நிறுவனம் செய்து கொண்ட ஒப்பந்தம் மன்றத்தின் அனுமதிக்கும், ஒப்பந்தத்தின் பேரில் பணி மேற்கொள்வதற்கு மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்குவதற்கும், இப்பணிக்கான மாதாந்திர கட்டணம் ரூ.12000/- | தீர்மானம் எண்.4095<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | வழங்குவதற்கும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பெருகொள்ளை நோயாக (Pandemic) உருவெடுத்துள்ள கொரோனா (கோவிட்-19) வைரஸ் தொற்று சர்வதேச பரவலின் காரணமாக அவசர அவசியம் கருதி ஒப்பந்தம் மேற்கொண்டதையும், பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1840/2020/எச்1 | |
| | பொருள் எண்: 14<br>கோவில்பட்டி நகராட்சி எல்லைக்கு உட்பட்ட கோவில்பட்டி வட்டம் மற்றும் நகரம் டவுண் சர்வே வார்டு C, பிளாக் எண்.25, நகரளவை எண்.4/1-ல் அமைந்துள்ள 4800 ச.மீ பரப்பளவுடைய வருவாய் துறைக்கு பாத்தியப்பட்ட சர்க்கார் புறம்போக்கு மற்றும் G.R நத்தம் புறம்போக்கு நிலத்தினை தமிழ்நாடு நிதி (கூட்டுறவு தணிக்கை) உதவி இயக்குநர் அலுவலகம் கட்டுவதற்கு நிலமாற்றம் செய்ய கோரும் இடத்திற்கு நகர்மன்ற தீர்மானம் இயற்றி தரக் கோரி வரப்பெற்றுள்ள வட்டாட்சியர், கோவில்பட்டி அவர்களது ந.க.எண். அ1/2615/2018, நாள்.16.06.2020-ம் தேதிய கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:-<br>கோவில்பட்டி நகரம் டவுண் சர்வே வார்டு C, பிளாக் எண்.25, நகரளவை எண்.4/1-ல் சர்க்கார் புறம்போக்கு மற்றும் கிராம நத்தம் என்று நகரளவை ஆவணங்களில் பதிவாகி உள்ளதாகவும் 4800 ச.மீ பரப்பளவு நிலத்தினை தமிழ்நாடு நிதி (கூட்டுறவு தணிக்கை) உதவி இயக்குநர் அலுவலகம் கட்டுவதற்கு உரிய நகரளவு வரைபடம் மற்றும் பதிவேடு நகல் குறியீடு செய்து காண்பிக்கப்பட்டுள்ளது. மேலும் நகரளவை ஆவணங்களின்படி நிலமாற்றம் செய்ய கோரும் மேற்படி நிலம் வருவாய் துறைக்கு பாத்தியப்பட்டதாக உள்ளதால் தமிழ்நாடு நிதி (கூட்டுறவு தணிக்கை) உதவி இயக்குநர் அலுவலகம் கட்டுவதற்கு வருவாய் துறையினர் முடிவு செய்து கொள்ள இசைவு அளிக்கலாம்.<br>(ந.க.எண்.3035/2020/எப்1) | தீர்மானம் எண்.4096<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| | பொருள் எண்: 15<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 13-ல் உள்ள முகமது சாலியாபுரம் இரண்டாவது தெருவில் சிறுபாலம் பழுதடைந்து போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதால் அதனை அகற்றி விட்டு புதிய சிறுபாலம் அமைப்பதற்கு உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.72,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலகக் குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3367/2020/இ1) | தீர்மானம் எண்.4097<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | <u>பொருள் எண்: 16</u><br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 3-ல் உள்ள நடராஜபுரம் மேற்கு 8வது தெருவில் உள்ள சிறுபாலம் பழுதடைந்துள்ளதால் அதனை அகற்றிவிட்டு புதிய சிறுபாலம் அமைப்பதற்கு உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.66,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்பகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u> :- மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3367/2020/இ1) | தீர்மானம் எண்.4098 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| | <u>பொருள் எண்: 17</u><br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 13-ல் உள்ள முகமது சாலியாபுரம் 3வது தெருவில் உள்ள சிறுபாலம் சேதமடைந்துள்ளதால் அதனை அகற்றிவிட்டு புதிய சிறுபாலம் அமைப்பதற்கு உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.70,000/-க்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u>:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3367/2020/இ1) | தீர்மானம் எண்.4099 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| | <u>பொருள் எண்:18</u><br>இந்நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள இந்திய திருநாட்டின் 74-வது சுதந்திர தினவிழாவில் நகராட்சி ஆணையாளர் அவர்களால் தேசிய கொடி ஏற்றி மரியாதை செலுத்தும் நிகழ்விற்கு புதிய தேசிய கொடி, கயிறு. பூக்கள், மாலை, இனிப்பு, காரம் வாங்குவதற்கும், தேவையான இருக்கை வசதிகள் ஏற்படுத்தவும், அதனை தொடர்ந்து நடைபெற உள்ள நிகழ்ச்சியில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு இந்நகராட்சியில் பணிபுரிந்து கொண்டிருக்கும் அனைத்து பிரிவு பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு சால்வை அணிவித்து சிறப்பு பரிசு வழங்கி கௌரவப்படுத்தவும், கொரோனா தடுப்பு முன்களப் பணியில் சிறப்பாக பணியாற்றிய பொதுசுகாதாரப் பணியாளர்களுக்கு சிறப்பு பரிசு வழங்கிடவும், ஆணையாளர் அவர்கள் அனுமதிக்கும், இதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.25,000/-க்கும் மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து பயன்படுத்தி கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u> :- மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்3424/2020/பி2) | தீர்மானம் எண்.4100 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

**பொருள் எண்: 19**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண்கள் TN96B5276, TN96B5180, TN96B5143ல் டயர்கள் பழுதாகியுள்ளதால் புதிய டயர்கள் சப்ளை செய்வதற்கு 20.07.2020 தேதியில் விலைப்புள்ளி பெறப்பட்டது. இதில் கீழ்க்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண். | வாகனம் எண் | Abirami Tyres No849/6, 849/7, Dakshinamara Nadar Sangam Building, Kovilpatti 628501 | Sri Guru Tyres No.3/162, Madurai Main Road, Kurunji Nagar, (Near) P.R.C. Depot Sattur-626203. |
|---|---|---|---|
| | | ஒன்றுக்குரிய தொகை + GST | |
| | | Rs.P. | Rs.P. |
| 1. | TN96B5276 | 2500 | 2800 |
| 2. | TN96B5180 | 2500 | 2800 |
| 3. | TN96B5143 | 2500 | 2800 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த Abirami Tyres, No.849/6, 849/7, Dakshinamara Nadar Sangam Building, Kovilpatti 628501. விலைப்புள்ளியினை மன்ற அனுமதிக்காக வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

பொதுசுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு விலைப்புள்ளி கோரியதையும், குறைவான விலைப்புள்ளி அளித்த Abirami Tyres, No.849/6, 849/7, Dakshinamara Nadar Sangam Building,Kovilpatti-628501 விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.2559/2020/எச்1)

தீர்மானம் எண்.4101 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்: 20**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண்.TN69R4926-ல் மின்கலம் பழுதாகி விட்டதால் புதிய மின்கலம் சப்ளை செய்வதற்கு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்வதற்கும் இதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.10000/-க்கும் மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3321/2020/எச்1)

தீர்மானம் எண்.4102 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | <u>பொருள் எண்: 21</u><br>தூய்மை இந்தியா திட்டம் 2018-19ன் கீழ் 7-வது மாநில உயர்மட்ட அதிகார குழுவினரால் அனுமதிக்கப்பட்டு, இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக பெறப்பட்டுள்ள 9 எண்ணம் இலரக வாகனங்கள் (LCV) இயக்குவதற்கு தேவையான ஓட்டுநர்களை ஆட்கள் வெளிக்கொணர்வு முறையில் தற்காலிகமாக நியமித்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.22866/P3/2018, நாள்: 23.082018-ல் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆகவே மேற்படி வாகனங்களில் 5 எண்ணம் தற்போது இயங்கிக்கொண்டு இருக்கிறது. இந்நகர்மன்ற தீர்மான எண்.3655 நாள்: 31.07.2019ல் ஆட்கள் வெளிக்கொணர்வு முறையில் ஓட்டுநர்களை அனுப்பி வாகனங்களை இயக்க குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த அவர்லேண்ட் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் பி.லிட்., நிறுவனத்தாரின் ஒப்பந்த புள்ளியினை ஏற்று அங்கீகரிக்கப்பட்டது. கொரோனா (கோவிட்-19) வைரஸ் தொற்று பரவல் காரணமாக 01.07.2020 முதல் 30.06.2021 வரை உள்ள காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநர்களை வெளிக்கொணர்வு முறையில் நியமிக்க ஒப்பந்தபுள்ளி கோர வழியில்லாததால் ஏற்கனவே வெளிக்கொணர்வு மூலம் ஓட்டுநர்களை வழங்கி கொண்டிருக்கும் அவர்லேண்ட் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் பி.லிட்., நிறுவனத்தாரரிடம் ஒப்புதல் கடிதம் பெறப்பட்டு 01.07.2020 முதல் 30.06.2021 வரை உள்ள காலத்திற்கு 5 ஓட்டுநர்களை அனுப்பவும் மற்றும் அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.20 இலட்சத்திற்கும், மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2901/2019/எச்1) | தீர்மானம் எண்.4103 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| | <u>பொருள் எண்: 22</u><br>நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.15081/2018/டிபி3 நாள்:18.07.2020-ன்படி நகராட்சி பகுதிகளில் காலியாக இருக்கும் இடங்களில் மியாவாக்கி முறையில் குறைந்த இடத்தில் அதிக எண்ணிக்கையிலான மரங்கள் நட்டு 6 முதல் 7 ஆண்டுகள் வரை சரியான முறையில் பாதுகாத்து வரப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்கு இரண்டு இடங்கள் தேர்வு செய்து செயல்படுத்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்படி இலுப்பையூரணி வருவாய் கிராமத்திற்குட்பட்ட சர்வே எண்.540 Part 2, Part 4-ல் ஒரு இடமும், சிதம்பராபுரம் கலவை உரக்கிடங்கில் ஒரு இடமும், தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடங்களின் வரைபடமும், இடங்கள் தேர்வுக்கான மன்றப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3373/2020/எச்1) | தீர்மானம் எண்.4104 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது |

பொருள் எண்: 23

இந்நகராட்சி பகுதிகளில் கொரோனா தொற்று பாதிக்கப்பட்ட பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளில் ஒட்டுவதற்கு வீடு வீடாகச் சென்று பெயர் மற்றும் பாதிக்கப்பட்ட நபர்களின் விபரங்கள், தனிமைப்படுத்தப்பட வேண்டிய நாட்களின் விபரங்கள் குறித்த A3 அளவில் நோட்டீஸ் உடன் அச்சிட்டு சப்ளை செய்ய 14.07.2020 தேதியில் விலைப்புள்ளி பெறப்பட்டது. இதில் கீழ்க்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண். | பொருட்களின் விபரம் | ஸ்ரீபாலா டிஜிட்டல் 550/8, மெயின் ரோடு, கோவில்பட்டி-628501 | ஜெய்ஸ்ரீ பிரிண்டர்ஸ் 117, தெற்கு பஜார், கோவில்பட்டி 628 501. | R.K.டிஜிட்டல், 71 ஆர்.சி.சர்ச் எதிர்புறம், ராமலிங்கம் பிள்ளை தெரு, கோவில்பட்டி. |
|---|---|---|---|---|
| | | A3 அளவில் (ILI FEVER QUARANTINE) பிரிண்டிங் செய்ய 1000 எண்ணத்திற்குரிய தொகை + GST | | |
| | | Rs.P. | Rs.P. | Rs.P. |
| 1. | கொரோனா வைரஸ் நோய் காய்ச்சல் தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளில் பெயர், நாட்கள் விபர அறிவிப்பு நோட்டீஸ் A3 அளவில் (ILI FEVER QUARANTINE) பிரிண்டிங் 2000 எண்ணம் | 6200 | 7800 | 7000 |

வரப்பெற்ற விரைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த ஸ்ரீபாலா டிஜிட்டல் 550/8, மெயின் ரோடு, கோவில்பட்டி-628501 விலைப்புள்ளியினை ஏற்கலாம். செலவினத் தொகை மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:-

(அ) பொதுசுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு விலைப்புள்ளி கோரியதையும், குறைவான விலைப்புள்ளி அளித்த ஸ்ரீபாலா டிஜிட்டல் 550/8, மெயின்ரோடு, கோவில்பட்டி - 628501 விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1840/2020/எச்1)

தீர்மானம் எண்.4105
அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

<table>
<tr>
<td></td>
<td>
<u>பொருள் எண்: 24</u><br>
இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனம் எண்.TN69R4926ல் மின்கலம் பழுதாகிவிட்டதால் புதிய மின்கலம் சப்ளை செய்ய 14.07.2020 தேதியில் விலைப்புள்ளி பெறப்பட்டது. இதில் கீழ்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>
<table>
<tr><th>வ. எண்.</th><th>பெயர் மற்றும் முகவரி</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>New Sun Power Life Battery Centre<br>23H/25, A.V.School Complex,<br>Kathiresankovil Street,<br>Kovilpatti.</td><td>7900/-</td></tr>
<tr><td>2.</td><td>Blue Star Limited,<br>23A/1/2 Sri Alagar Illam,<br>Jeeva Nagar, Kathiresan kovil Road,<br>Kovilpatti.</td><td>8350/-</td></tr>
</table>
வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த New Sun Power Life Battery Centre, 23H/25, A.V.School Complex, Kathiresankovil Street, Kovilpatti விலைப்புள்ளியினை மன்ற அனுமதிக்காக வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக் குறிப்பு:-</u><br>
(அ) பொதுசுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு விலைப்புள்ளி கோரியதையும், குறைவான விலைப்புள்ளி அளித்த New Sun Power Life Battery Centre, 23H/25, A.V.School Complex, Kathiresankovil Street, Kovilpatti விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.<br>
(ந.க.எண்.3231/2020/எச்1)
</td>
<td>தீர்மானம் எண்.4106<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது</td>
</tr>
</table>